

ரீல்ஸ் அரசியலுக்கு விடை கொடுத்து, கொள்கை அரசியலில் பயணிக்கும் வகையில் கோவை வடக்கு மாவட்டம், கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கோவை மாநகர் மாவட்ட த.வெ.க. இளைஞர் அணி இணைச் செயலாளர், வி.கே.வேலு தலைமையில் 10க்கும் மேற்பட்ட த.வெ.க நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்ட துணைச் செயலாளர் அசோக்பாபு ஆறுக்குட்டி முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். உடன் விளாங்குறிச்சி பகுதி 9வது வார்டு வட்ட கழகப் பொறுப்பாளர்கள் ஆ.அரங்கசாமி, மோ.அருண் உள்பட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இள.புகழேந்தி தலைமை! கலாநிதி வீராசாமி எம்.பி., பரிதி இளம்சுருதி பங்கேற்பு!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

கடலூர் கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! - எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கடலூர், நவ.5- கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், 02.11.2026, திங்கள் கிழமை, மாலை 5 மணியளவில், காட்டுமன்னார்கோவில் எம்.ஆர்.கே. கூட்டரங்கத்தில், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர், குறஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி, துணை செயலாளர் பரிதி இளம்சுருதி ஆகியோர் சிறப்புரையாற்றி னார்.

முன்னாள் எம்.எல்.ஏ. க்கள் மருதூர் இராமலிங்கம், கோ.ஐயப்பன், துரை. கி. சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம். ஆர்.கே.பி.கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

இளைஞர் அணிச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர், பாசமிகு மனிதநேயர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாள் நவம்பர் 27 தனது தீவிரமான திராவிடரியக்க கொள்கைகளை நாடு முழுவதும் கூறி கழகம் வளர்க்கும் அவரின் பிறந்த நாள் நிகழ்வுகளை மாவட்டம் முழுவதும் மாநகரம், நகரம், ஒன்றியம், பேரூர், ஊராட்சி உட்பட அனைத்துப் பகுதிகளிலும் கிளைக்கழகங்களி லும், அனைத்து அணியினரும் இணைந்து மக்கள் நலத் திட்டங்கள், இளைஞர்க ளுக்கு, மாணவ, மாண வியர்க்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி கொடியேற்றி கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப் பட்டது,

தலைமைக்கழகத்தின் ஆணைப்படி, கழக மறுசீரமைப்பு பணிகளை மாவட்டக்கழகத்தின் வழிக்காட்டுதல்படி மாநகரம், நகரம், ஒன்றியம், பேரூர், உட்பட அனைத்துப்பகுதிகளி லும் சிறப்பாக செய்யப் பட்டு தலைமைக் கழக நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்டக்கழக அறிவுறுத்தல்படி செய்வது என்றும் முடிவு செய்யப் பட்டது.

தமிழ்நாட்டின் இருண்ட காலமாக நடந்துவரும் தற்குறி த.வெ.க. ஆட்சியில் பாலியல் வன் முறைகள் படுகொலைகள், போதை பொருட்களின் மூலம் சட்டம் ஒழுங்கை நாசமாக்கும் ஆளும் கட்சி நிர்வாகிகளின் இழிவான செயல்கள் எதையும் தடுத்து நிறுத்திட சட்டம் ஒழுங்கை காப்பாற்றிட, எந்த நடவடிக்கையும் எடுக்காமல், தனிவிமானத்தில் உல்லாசமாக ஊர் சுற்றும் டம்மி முதல்வரை வன்மையாக கண்டிக்கி றோம்.

டம்மி முதல்வரின், நிர்வாக சீர்கேடுகள் மக்கள் விரோதப் போக்குகளை எதிர்த்து நாடுமுழுவதும் போராட்டங்கள் நடக்கின்றன, மாணவர்களின் போராட்டம், மின்கட்டண உயர்வு, மின் வெட்டு அதிகரிப்பும், கல்வித்துறையின் கவனமின்மையும் உள்ள நடிகர் முதல்வரின் அரசை விரைவில் விரட்டிட எல்லாத் தரப்பு மக்களும் திரண்டெழுகிறார்கள். கழக நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள் மீதெல்லாம் பொய்வழக்குகள் போட்டு திசைத்திருப்பும் அரசியலை தவெக அரசு மூலம் செய்கிறார்கள். மக்கள் முதல்வர் தலைவர் தளபதி அவர்கள் கூறிய படி, "வாக்களிக்காதவர்கள்" மட்டும் அல்ல வாக்களித்தவர்களும் த.வெ.க.வின் தடுமாறும் கொள்ளையர் ஆட்சியை எதிர்க்கிறார்கள். மாவட்டக் கழகத்தின் சார்பில் தலைமைக் கழக ஆணைகளை ஏற்று போர்க்களம் செல்ல இக்கூட்டம் என்றும் தயார் எனக் கூறி தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இச்செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர்க் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழக மின் வாரியத்திற்கு நிலக்கரி சப்ளை செய்ததில் ரூ.800 கோடி இழப்பு!

அதானி மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்ய தயங்குவது ஏன்?

முதல்வருக்கு – முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, நவ.5- சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

பாரதப் பிரதமர் மோடி அவர்கள் குஜராத் முதலமைச்சராக இருந்தபோது "சஹாரா" நிறுவனத்திடம் இருந்து நான்கு தவணைகளாக 25 கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக சி.பி.ஐ. மற்றும் வருமான வரித் துறை (2013-2014) சோதனையின் போது கிடைத்த சஹாராடைரிகுறிப்புகளின் அடிப்படையில் வழக்கு மற்



றும் விசாரணை நடத்த நடவடிக்கை எடுத்தால் இந்திய ஜனநாயகத்தை குழி தோண்டி புதைப்பது போல் ஆகிவிடும் என 2017-ல் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

ஆனால் முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு மற்றும் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் மீதும் இதுபோல் உறுதிப்படுத்தப்படாத தகவல்களின் அடிப்படையில் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலுக்கு மாறாக தமிழக காவல்துறை வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்துவது நியாயமா CM sir ?

தமிழக மின்வாரிய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதற்கு குறைவான தரத்தில் நிலக்கரியை அதானி நிறுவனம் சப்ளை செய்ததில் 800 கோடி ரூபாய்க்கு மேல் TNEB க்கு இழப்பு ஏற்படுத்தி விட்டதாக CAG அளித்த உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் பிரதமர் மோடியின் நண்பர் அதானி மீது தமிழக காவல் துறை வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க தயங்குவது ஏன் CM Sir?

இவ்வாறு அவர் தனது வலைதளத்தில் கூறியுள்ளார்.

நாமக்கல் – ஈரோடு – கரூர் மாவட்ட மாணவரணி ஆலோசனைக் கூட்டம்!

உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளில் நலத்திட்ட உதவிகள்!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் திருமதி ஜெ.வீரமணி அறிவிப்பு!



நாமக்கல், நவ. 5- நாமக்கல், ஈரோடு, கரூர் ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர் கள் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் நாமக்கல் கிழக்கு மாவட்டம் ப.சத்தியசீலன், கரூர் மாவட்டம் ஆர் ஜி.சரவண மூர்த்தி, ஆர்.செல்வம், கரூர் மாநகரம், ஈரோடு மாவட்ட அமைப்பாளர் கள் தா.கி.கிருபாகரன் என் ராசு என்கிற எஸ்.கோபால், எம்.தனசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் சுரேஷ்குமார் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி வர வேற்றார். மாநில மாணவர் அணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் தமிழ் மாணவர் மன்றம் அமைத்தல், தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், வரும் 31ஆம் தேதி நாமக்கல்லில் மகளிர் அணி சார்பில் நடைபெற உள்ள தவெக அரசுக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டம் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

ஒரு கல்லூரிக்கு குறைந்த பட்சம் 25 மாணவர்களைத் தமிழ் மாணவர் மன்றத்தில் இணைக்க வேண்டும் என்றும், மாணவர் அணி சார்ந்த பணிகளை ஐடி பிரிவில் பதிவிட வேண்டும் என்றும் வீர மணி ஜெயக்குமார் வலியுறுத்தினார். உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு வரும் நவம்பர் 27 ஆம் தேதி அந்தந்த மாவட்டங்களில் மாணவர் களுக்குப் பயனளிக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மேலும், மாணவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் பொருட்களை வழங்குவது போன்ற பயனுள்ள பணிகளில் மாணவர் அணி கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது செய்யப் பட்டதைக் கண்டித்த அவர், தி.மு.க. வினர் மீது அவதூறு பரப்பி, உழைப்பவர்களை ஒடுக்க வேண்டும் என்ற நோக்கில் த.வெ.க. அரசு செயல்படுவதாகக் குற்றம்சாட்டி, த.வெ.க. அரசைக் கண்டிப்பதாகக் கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் நடன சபாபதி, துணை அமைப்பாளர் நானா நாணி கார்த்தி, நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சத்தியசீலன் சத்தியசீலன், கடல் அரசன் கார்த்தி, எம்.என்.டி.கௌதம், சக்திவேல், மணிகண்டன், திருச்செங்கோடு நகரச் செயலாளர்கள் ஆர்.நடேசன், தா. கார்த்திகேயன், ரவி, ஒன்றியச் செயலாளர்கள் வட்டூர் ஜி.தங்கவேல், தாமரைச் செல்வன், அருண், ராம சாமி, எம்.தங்கவேல், லலித் குமார், சாமிநாதன், சரவண குமார், சுப்பிரமணியம், ஏ.பி.ஆர்.சண்முகம், பேரூர் செயலாளர்கள் நாச்சிமுத்து, குமார், ரமேஷ் பாபு, முருகவேல், கார்த்திக் ராஜ், தீபன், ராமமூர்த்தி மாவட்ட தொ.மு.ச. சுந்தரமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் அன்பழகன், சாந்தி, ரங்கசாமி, ஒ.ஆர்.செல்வராஜ், வெங்கடாசலம், திருநாவுக்கரசு, சோமசேகர், சிவக்குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் சுரேஷ்பாபு மற்றும் கரூர் ஈரோடு ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் என 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இறுதியாக நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

வேலூர் ஆட்சியர் அலுவலகத்தில் மின்வெட்டு!

வேலூர், நவ.5- வேலூர் ஆட்சியர் அலுவலகத்தில் மின் ஒயர்கள் மீண்டும் எரிந்ததால் 3 மணிநேரம் மின்சாரம் இல்லாமல் ஆட்சியர் அலுவலகம் இருளில் மூழ்கியது.

வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரியில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அடிக்கடி மின் ஒயர்கள் தீப்பற்றி எரிகிறது.

இதனை முழுமையாக சீரமைக்காததால் அடிக்கடி இது போன்று மின் ஒயர்கள் எரிந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முழுவதும் இருளில் மூழ்கியது. புகை மூட்டம் வந்ததால் மின் சர்க்யூட் ஒயர் எரிந்ததை தீயணைப்பானை கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக பணி யாளர்கள் அணைத்தனர். இதனால் சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இருளில் மூழ்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. அடிக்கடி மின் ஒயர்கள் தீப்பற்றி எரிவதும் ஆட்சியர் அலுவலகம் இருளில் மூழ்குவதும் தொடர்கதையாகியுள்ளது.

தமிழகத்தில் தவெக ஆட்சி அமைத்த காலத்திலிருந்தே மின்வெட்டு இருந்து வருகிறது. இதனால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். திருப்பூர், கோவை உள்ளிட்ட தொழில் நகரங்களில் ஆலைகள் இயக்குவதில் பிரச்சினை ஏற்பட்டு வருகிறது.

இரவு நேரங்களில் அறிவிக்கப்படாத மின் வெட்டால் பொதுமக்கள் தூக்கத்தை தொலைத்து விட்டு சாலைகளில் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதெல்லாம் அரசின் கவனத்திற்கு சென்றாலும் இதுவரை நிரந்தர தீர்வு காணப்பட வில்லை. தமிழகத்தில் அங்கும் இங்கும் என எங்காவது மின்வெட்டு ஏற்பட்டு வருகிறது.

சட்டம் - ஒழுங்குச் சீர்கேடு, பெண் குழந்தைகள் பாதுகாப்பு, விலைவாசி உயர்வைக் கண்டித்து நாமக்கல்லில் தி.மு.க. மகளிர் அணியினர் கண்டன ஆர்ப்பாட்டம்!

நாமக்கல், நவ 5- தமிழ்நாட்டில்சட்டம் ஒழுங்குச் சீர்கேடு, பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் விலைவாசி உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளைக் கண்டித்து, நாமக்கல்லில் தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழகத் துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களின் ஆலோசனையின்படியும், நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஆர். என்.ராஜேஷ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி, கழக மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.ராணி ஆகியோர் வழிகாட்டுதலின்படி நாமக்கல் பூங்கா சாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் ஜோதிலட்சுமி வரவேற்புரை ஆற்றினார். மகளிர் தொண்டரணி அமைப்பாளர் வி. கௌரி தலைமை தாங்கினார். மாநிலக் கல்வியாளர் அணித் துணைச் செயலாளர் சுதா ஜெயக்குமார், நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜோதி, தொண்டரணி அமைப்பாளர் ராதிகா சக்திவேல், நகர்மன்றத் தலைவர்கள் இராசிபுரம் கவிதா சங்கர், திருச்செங்கோடு நளினி சுரேஷ், ஜோதி, ராதிகா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக அவிநாசி மருத்துவர் கோகிலா மணி சிறப்புரையாற்றினார். போராட்டத்தில் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியினர் மற்றும் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட பொதுமக்களும் கலந்துகொண்டு தமிழ்நாட்டில் நிலவி வரும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண் குழந்தைகள் பாதுகாப்பு, விலைவாசி உயர்வைக் கண்டித்து தவெக அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர்.

இப்போராட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் ராணி பெரியண்ணன், மேற்கு மாவட்ட துணை செயலாளர் சாந்தி, நாமக்கல் கிழக்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் வழக்கறிஞர் த.கீதாலட்சுமி, வலை தள பொறுப்பாளர் இ.சிலம்பரசி, பாப்பாத்தி, மலர்விழி சம்பத், மகாலட்சுமி, அகிலா, செல்வி போஸ், கனகம், லதா, ஜெயசுதா, ராஜாராணி, சித்ரா சரவணன், பூவிழி, சரஸ்வதி, தங்கம், தவமணி, கீதா, முல்லை பூங்கொடி, பொன்னம்மாள், பாப்பாத்தி,

மேற்கு மாவட்ட நிர்வாகிகள் அம்பிகா பாண்டியன், ஜெயதேவி, மகேஸ்வரி, சித்ரா, கலா, கயல்விழி, ராதாமணி, மேனகா, வசந்தா, அருள்செல்வி, தேன்மொழி, பாவாயி ஜெயமணி, சந்திரா, இந்திராணி சுமதி திலகவதி செந்தமிழ் செல்வி சினேகா மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோவை மு. சுலைமான்

நவம்பர் 5 (1983)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கோவை மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டம் அமல்படுத்தப்பட்ட போதும், தைரியமாக முரசொலி முகவராக பணியாற்றியவர்.

கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராக பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



புதுக்கோட்டை மாநகராட்சி 1 மற்றும் 2வது வார்டுகளில் பணிபுரியும் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு புதுக்கோட்டை மாமன்ற உறுப்பினர் சி.மதியழகன் புத்தாடைகள் , இனிப்புகள் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கி சிறப்பித்தார்.